Day Class
Physics: திரு. சத்தியசீலன்
Chemistry: திரு. மகிழ்
Zoology: திரு. நாகநாதன்
Botany: திரு. சுரேந்திரன்
Pure & Applied Maths: திரு. நவலையா
New Master Institute
B.M.C. Lane, Jaffna

Registered as a Newspaper

உதயன்

விலை ரூ.1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

நடைபெறுகிறது!
A/L 87 Day Class
பிரிவு I
8.00 - 9.00 CHEMISTRY
9.00 - 10.00 PHYSICS
10.00 - 11.00 ZOOLOGY
11.00 - 12.00 BOTANY (PURE & APP.)
10.00 - 12.00 (MATHS
New Master Institute
B.M.C. Lane, Jaffna.

கடிதம்:- 1 யாழ்ப்பாணம் அக்டோபர் புரட்டாதி மீ 13 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 முஹர்ரம் பிறை 24 (29-09-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY இதழ்:- 267

சிறைக்கு வெளியே போராட்டம் நடத்த

மாணவர் கூட்டமைப்பு

நாளை ஆர்ப்பாட்டப் பேரணி

யாழ்ப்பாணம், செப்டம்பர் 29

சிறைகளில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்திருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக சிறைக்கு வெளியே போராட்டம் நடத்துவதற்கு வலிமைமிக்க மாணவர் கூட்டமைப்பு ஒன்று உருவாகி இருக்கிறது.

சகல விடுதலை இயக்கங்களின் மாணவர் அமைப்புகளும் ஏனைய மாணவ அமைப்புகளும் நேற்று யாழ்நகரில் கூடி இந்தக் கூட்டமைப்பை உருவாக்கின.

"சிறைக் கைதிகளின் போராட்டத்திற்கான மாணவ அமைப்புகளின் கூட்டமைப்பு" எனப் பெயரிடப்பட்டிருக்கும் இந்த அமைப்பின் சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றும் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

இந்த தொடர்பாக கூட்டமைப்பு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பது வது:-

சிறிலங்கா இனவெறி அரசின் வதை முகாம்களில் எமது மக்கள் தமது அடிப்படைத் தேவைகளை கோரி இன்று வரை பதினெட்டாவது நாள் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கின்றார்கள்.

சிறிலங்கா முதலாளித்துவ பிரசார சாதனங்கள் இப்போராட்டத்தை வழமை போலவே மூடி மறைக்க முயல்கின்றன. சிறைகளில் நடக்கும் விடயங்கள், கொலைகள் வெளியே தெரிவதில்லை. இந்நிலையில் மாணவர்களாகிய நாம் போராட்டம் நடத்தி வரும் எமது மக்களின் நியாயமான போராட்டத்திற்கு ஆதரவாக எம்மை மை போராட்டங்களை நடத்தி உலகிலுள்ள மனித நேயமிக்க மக்களுக்கு தெரியப்படுத்தும்

(4ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

29—9—1986
திங்கட்கிழமை
சுபநேரம்:
12.02 முதல் 1.32 வரை
ராகுகாலம்:
7.32 முதல் 9.02 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
ஏ. நாதன் விரதம்

கோட்டையிலிருந்து சூடு!

யாழ்ப்பாணம், செப் 29

நேற்றுக் கோட்டையிலிருந்து திடீர்த் துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டன.

கடற்கரை வீதி, முனீஸ்வரன் வீதி, கே.கே.எஸ் வீதி, கொட்டடி ஆகிய பகுதிகளை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தெய்வாதீனமாக எவருக்கும் காயமோ உடைமைகளுக்குச் சேதமோ ஏற்படவில்லை. (உ-10)

தொண்டமானாறு; ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், செப் 29

நேற்று தொண்டமானாறு இராணுவ முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

காலை பதினொரு மணி அளவில் நடத்த இத்தாக்குதலால் தாக்குதலினால் மக்கள் பீதியடைந்தனர்.

இந்தத் தாக்குதல்களினால் சில வீடுகளும் சேதமடைந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

பொது மக்களுக்கு ஏற்பட்ட உடல், உயிர் சேதங்கள் பற்றித் தகவல் ஏதும் கிடைக்கவில்லை. (உ.10)

சிப்பாய்களுக்கு போன பொருள்கள் பறிமுதல்

யாழ்ப்பாணம், செப். 29

கோட்டையில் உள்ள சிப்பாய்களுக்கு மேற்கொண்டு செல்லப்பட்ட இரண்டு வீடியோக்களைட் டுக்கள், தொப்பி, பான் முதலியன அப்பகுதியில் சென்றியில் இருந்த 'பொலீட்' இயக்கப் போராளி ஒருவரினால் பறி

4 ஆம் பக்கம் பார்க்க

காரைநகரில் கடற்படை முகாமுக்கு மின்சாரம் துண்டிப்பு

படையினருக்கு கொடுக்கும் நெருக்கடியில் ஒரு வகையானது என்கிறது ஈ. பி. ஆர். எல். எவ்.

யாழ்ப்பாணம், செப்டம்பர் 29

காரைநகரில் உள்ள கடற்படை முகாமுக்கான மின்சார விநியோகத்தை தாம் துண்டித்து விட்டதாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எவ்) அறிவித்துள்ளது.

படையினருக்கு நெருக்குதல் கொடுக்கும் தமது திட்ட நடவடிக்கைகளில் இதுவும் ஒருவகையானது என்று ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் வெளிவிட்ட அறிக்கை ஒன்றில் விவரிக்கப்படடுள்ளது.

பிரசுரிக்கப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

எமது நிலத்தில் ஆக்கிரமிக்கும் நோக்குடன் முகாமிட்டுள்ள அரச படையினரைத் தொடர்ச்சியான தாக்குதல்கள் மூலம் முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்கச் செய்துள்ளோம்.

தொடர்ந்து அம் முகாம்களுக்கு தொடர்ச்சியான அநுருட்டிகளைக் கொடுத்து அவர்களை பின்வாங்கச் செய்யும் முயற்சியை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம்.

மின்விநியோகம் துண்டிக்கப்பட்டதால் படையினர் தமது தேவைகளைப் பெற்றுக்கொள்வதில் மிகுந்த இக்கட்டிற்குள்ளாகியுள்ளனர். இவர்மீது மேலும் நெருக்கடிகள் தொடரப்படும். (உ)

பல்கலைக்கழகத்தில் ஐந்தாவது நாளாக நேற்று உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், செப் 29

பூஸா, வெலிக்கடைச் சிறைச்சாலைகளில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் தமிழ் கைதிகளுக்கு ஆதரவாக யாழ் பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் உண்ணாவிரதப் போராட்டம் ஐந்தாவது நாளாக நேற்று நடைபெற்றது.

இரண்டாம் கட்ட உண்ணாவிரதம் இன்றுடன் முடிவடைகிறது.

இந்த உண்ணாவிரதத்தில் பெருமளவு மாணவர்கள் பங்குபற்றினர்.

இன்று நடைபெறும் பொதுக்கூட்டம் ஒன்றில் பல்கலைக்கழக மாணவர்களின் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து முடிவு செய்யப்படும். (உ-10)

பாடசாலை பொருள்கள் மீட்பு

பலாலி, செப். 29

வயாவிளான் மகாவித்தியாலய கட்டடங்களில் கடைத்த எடுக்கப்பட்ட பொருள்களை மீட்ட குழு அச்சுவேலி 'பென்னாம்' (கிறுவர் சீர் திருத்தப் பாடசாலை) பாடசாலையில் இருந்து கிளாலி எடுத்துச் செல்லப்பட்ட

(4ஆம் பக்கம் பார்க்க)

ஹெலி தாக்குதல் காரைநகரில் நேற்று

யாழ்ப்பாணம் செப் 29

காரைநகர் கடற்படை முகாம் பகுதியிலிருந்து நேற்றுப் பகல் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. ஹெலிக்கொப்டரிலிருந்தும் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது

ஷெல் தாக்குதலினால் பேக்கரி ஒன்று சேதமடைந்ததாக முறைப்பாடு கொண்டு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தாக்குதல்களினால் ஏற்பட்ட உயிர், உடைமைச் சேதங்கள் குறித்து முழு விவரமும் செய்தி அச்சுக்குப் போகும் வரைக் கிடைக்கவில்லை (உ)

புலிகள் வைத்த சூழ்ச்சிப் பொறியில் சிக்கி 3 சிப்பாய்கள் பலி

மூதூர் இருல்பாலத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 29

மூதூர் இருல் பாலத்தில் புலிகள் வைத்த சூழ்ச்சிப் பொறியில் சிக்கி 3 இராணுவத்தினர் உயிரிழந்தனர். பலர் பதுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 7 மணியளவில் இடம்பெற்றது

கட்டைபறிச்சான் இராணுவ முகாமிலிருந்து நடந்துவந்த 50க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் முகாமிலிருந்து 500 யார் தொலைவில் உள்ள இருல் பாலத்திற்கு வந்த சமயம் இந்தச் சம்பவம் நடந்ததாகப் புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இருல் பாலத்தில் எம்மால் வைக்கப்பட்டிருந்த பூபிடிராப் (சூழ்ச்சிப் பொறி) இணைச் சில இராணுவத்தினர் தூக்கிய போது அது வெடித்தது. மூன்று இராணுவத்தினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர் பலர் படுகாயமுற்றனர் — இப்படி புலிகள் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

திருகோணமலையிலுள்ள ஜேர்மன் அதிகாரிகளை திருப்பி அழைப்பதா?

தூதரகம் இன்று முடிவு செய்யும்

கொழும்பு, செப். 29

திருகோணமலையில் பணிபுரியும் மேற்கு ஜேர்மன் அதிகாரிகளை திருப்பி அழைப்பது பற்றி இன்று கொழும்பில் முடிவு செய்யப்படும்.

மேற்கு ஜேர்மன் தூதரக வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன

மேற்கு ஜேர்மனியில் உள்ள டியுச்வெலி வானொலி நிலையத்தின் நிருபர் கிளாஸ் சுவெட்லர் இன்று கொழும்பு வருகிறார்

உயிரிழந்த மேற்கு ஜேர்மனி எஞ்சினியரின் சடலத்துடன் அவர் நாளை (செவ்வாய்) மேற்கு ஜேர்மனி திரும்புவார்.

கொழும்பில் தங்கியிருக்கும் சமயத்தில் அவர் திருகோணமலை பதுகாப்பு நிலையை பற்றி அரசு அதிகாரிகளுடன் ஆராய்வார். நிலாவெளியில் உள்ள மேற்கு ஜேர்மன் வானொலி நிலையத்தில் ஒன்றில் வேலை செய்யும் ஜேர்மன் அதிகாரிகளை திருப்பி அழைப்பது குறித்து அப்பொழுது தீர்மானிக்கப்படும். (உ-எ)

விமானத்திலிருந்து மழைபோல் பொழிந்தது ஜேர்மன் என்ஜினியர் வந்த காரின் மீது குண்டுமாரி!

மரணவிசாரணையில் மற்றொரு ஜேர்மனியர் சாட்சியம்

திருகோணமலை, செப் 29

எமது காரின் மேலே விமானத்திலிருந்து குண்டு வீசப்பட்டது காரினால் இறந்த மேற்கு ஜேர்மன் பொறியியலாளரும் இருந்தார். விமானத்திலிருந்து 25 குண்டுகள் வரையில் காரின் மீதும் காரைச் சுற்றியுள்ள பிரதேசத்திலும் வீசப்பட்டன

— இப்படி, மற்றொரு மேற்கு ஜேர்மன் வாசியான ஹன்டர் ஹைப் (46 வயது), மரணவிசாரணையில் சாட்சியமளித்தார்.

விமானக் குண்டு வீச்சில் உயிரிழந்த மேற்கு ஜேர்மன் பொறியியலாளர் உமிர் ஹெபர்லிங் (வயது 43) இன் மரண விசாரணை கடந்த சனிக்கிழமை திருகோணமலை நீதிவான் திரு. கனகராஜா பி.வி முன்னிலையில் நடைபெற்றது

சாரதி ஹன்டர் ஹைப் சொன்னதாவது:-

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் திருகோணமலை நோக்கி காரில் வந்து கொண்டிருந்தோம். செய்சொக், ரொபின், பிராங்கேன், கப்பிரமணியம் ஜெகநாதன் ஆகியோருடன் இறந்தவரும் காரில் இருந்தார்.

காரை ஓப்பல் முகாமையாளரின் விட்டை நோக்கிச் செலுத்த ஆரம்பித்தேன் அச்சமயம் விமானம் ஒன்று அப்பகுதியைச் சுற்றியது திடீரென்று விமானத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(4-ஆம் பக்கம் பார்க்க)

இருதரப்புச் சண்டைகளுக்கு அகப்பட்டுத்தான் மேற்கு ஜேர்மன் எஞ்சினியர் செத்ததாகச் சொன்ன அரசாங்கத்தார் இப்ப நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாக வேணும் . . . செய்கிறமே . . . . !

அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக தமிழ் மாநிலம் எங்கும் சனியன்று உண்ணாவிரதம்

பிரசைகள் குழுக்கள் கூட்டாக ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப் 29

வெலிக்கடைச் சிறை, பூஸா தடுப்புமுகாம் ஆகியவற்றில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் கைதிகளுக்கு அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக பிரசைகள் குழு உறுப்பினர்கள், பிரசைகள் குழுக்களின் இணைப்புக் குழு உறுப்பினர்கள் ஒருநாள் உண்ணாவிரதம் ஒன்றை மேற்கொள்வர்.

வடக்கு, கிழக்கு உட்பட தமிழ் மாநிலம் முழுவதும் இந்த ஒரு நாள் உண்ணாவிரதத்தை அடுத்த மாதம் 4 ஆம் திகதி (சனிக்கிழமை என்று) நடத்த கூட்டாக முடிவு செய்துள்ளது.

பிரசைகள் குழு உறுப்பினர்கள், அந்தந்தப் பிரசைகள் குழு பிரதிநிதித்துவப்படுத்தும் பகுதிகளில் இந்த உண்ணாவிரதத்தை நடத்துவர்.

பிரசைகள் குழுக்களின் இணைப்புக் குழுக்களின் உறுப்பினர்கள் நல்லூர் இந்து விடுதியில் அக்டோபர் 4ஆம் திகதி உண்ணாவிரதம் இருப்பர்.

நேற்றுக்காலை நல்லூர் இந்து விடுதியில் நடைபெற்ற பிரசைகள் குழுக்களின் இணைப்புக் குழுக் கூட்டத்தில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது.

சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள தமிழ் கைதிகள் அரசியல் கைதிகளின் மோசமடைந்துவரும் உடல் நிலை நித்தம் குழு கவலை அடைந்துள்ளது.

ஆகவே தமிழ் கைதிகள் அரசியல் கைதிகளின் நீதியான கோரிக்கைகளை சாதகமான முறையில் கவனிக்கும்படி குழு ஜனாதிபதியைக் கேட்டுக் கொள்ளுகின்றது.—

இப்படி இணைப்புக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றொரு தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. (உ-எ-5)

மற்றொரு இயக்கப் போராளிகள் முகாமை முற்றுகையிட முயன்ற ராணுவம்மீது புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், செப் 29

முல்லைத்தீவு முகாமிலிருந்து சனிக்கிழமையன்று இரவோடு இரவாக உடும்பன்குளம் வழியாக வந்த சிப்பாய்கள் சக இயக்கத்தவர்களின் முகாம் ஒன்றை முற்றுகையிட முற்சித்தனர்.

இதனை அறிந்து எமது வீரர்கள் உடனடியாக அவ்விடத்திற்கு விரைந்து இராணுவத்தினர்மீது பலத்த பதுகாப்புத் தாக்குதல் நடத்தத் தொடங்கியதும் இராணுவத்தினர் பின்வாங்கத் தொடங்கினர்.

பின்வாங்கிய இராணுவத்தினரை எமது வீரர்கள் 3 ஆம் கட்டைவரை துரத்திச் சென்றனர்.

இச்சம்பவத்தின்போது இராணுவத்தினரிடம் இருந்து 2 ஆம்ஸ்லோட் மோர் ஷெல்கள் கிடைத்தமால் கைப்பற்றப்பட்டன. இராணுவத்தரப்பில் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவில்லை

—இப்படி புலிகள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திக்கொத்து

இலவச பால் பண்டித வகுப்பு

யாழ்ப்பாணம், செப் 29
நாவலர் சைவத் தமிழ்ப் பண்பாட்டு நிலையம் வரும் இருதி நாட்களில் இலவச பால பண்டித வகுப்புக்களை நடத்தவுள்ளது.

நிலையத் தலைவர் இரா. சுந்தரலிங்கம் இதனைத் தெரிவித்துள்ளார்.

வகுப்புக்கள் 12 ஆம் திகதி ஞாயிறு காலை 10 மணிக்கு வண்ணை நாவலர் ம.வி மண்டபத்தில் ஆரம்பமாகும். (இ-5

மிருகவளர்ப்பாளர் சங்கம் அங்குரார்ப்பணம்

வேலணை, செப். 29
வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மிருக வளர்ப்பாளர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 2.00 மணிக்கு வேலணை சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும்.

வேலணை மிருகவைத்திய அதிகாரி திரு செ. மாணிக்கவடிவேல் தலைமை வகிப்பார். (இ-167)

கோப்பாய் வட்டார கல்விக்கண்காட்சி

காலி, செப் 29
கோப்பாய் வட்டாரப் பாடசாலைகளின் கல்விப் பொருட்காட்சி நாளை 30 ஆம் திகதி புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் ஆரம்பமாக இருக்கின்றது.

அக்டோபர் 1 ஆம் திகதி வரைக்கும் நடைபெறவுள்ள இக்கண்காட்சியில் கோப்பாய் வட்டாரத்தில் உள்ள சுமார் 40 பாடசாலைகள் பங்குபற்றுகின்றன. (இ-119)

வேலணை-சுருவில் வீதி திருத்தம்

ஊர்காவற்றுறை செப் 29
வேலணை - சுருவில் முடிப்பிள்ளையார் கோவில் வீதி திருத்தப்படவுள்ளது.

இதற்கென யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையால் ஐம்பதினாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திருத்த வேலைக்கென தருவிக்கப்பட்ட தார் இன்னும் இங்கு கொண்டுவரப்படாத காரணத்தால் தற்போது கல்லுப் போடும் வேலைகள் மாத்திரமே நடைபெறவுள்ளன. (இ-16)

சுயதொழிலில் ஈடுபடுவோர் அமைப்பை உருவாக்க வேண்டும்

சேமலாப நிதிக் கணக்குப் புத்தகம் வழங்கும் வைபவத்தில் உதவி ஆணையாளர் உரை

யாழ்ப்பாணம், செப் 29
சுயதொழில் செய்வோர் ஓர் அமைப்பின் கீழ் ஒன்றுசேருவதுமூலம் சேமலாப நிதிக்கு உரித்தாக முடியும்

உதவி தொழில் ஆணையாளர் திரு எஸ் சி இராஜநாயகம் மேற்கண்டவாறு கூறினார்.

தனியார்துறை ஊழியர்களுக்கான ஊழியர் சேமல பதிவுக் கணக்குப் புத்தகங்களை வழங்கும் வைபவம் யாழ் பரிமோவான் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

திரு. இராஜநாயகம் தொடர்ந்து பேசுகையில், இன்று பல முதலாளிகள் ஊழியர்களுக்கான சேமலாபநிதிக்கு தங்கள் பங்குப் பணத்தைச் செலுத்தத் தவறிவிடுகிறார்கள்.

440 முதலாளிகளில் மட்டுமே வடபகுதியில் ஒழுங்காக சேமலாப நிதிப் பணம் செலுத்துகின்றார்கள்.

பல தொழிலாளிகள், குறிப்பாக கிராமப்புற விவசாயிகள், கூலிவேலை செய்வோர், மீனவர் தமது பிற்காலத்திற்கு உண்டானதைச் சேமிக்க முடிவதில்லை

இவர்கள் ஓர் அமைப்பின்கீழ் இணையாது இருப்பதே இதற்குக் காரணம் என்றார்.

யாழ் அரசாங்க அதிபர் திரு. வை எம். பஞ்சலிங்கம் பேசுகையில் கூறியதாவது;

தொழிலாளி - முதலாளி ஒன்றுபட்டாலே ஒரு நாடு சுபிட்சமடைய முடியும்.

இன்று இவ்விழாவில் வடபகுதி தொழிலாளர்களையும் முதலாளிகளையும் ஒன்றாகக் காண்பதையிட்டு மகிழ்வதோடு; இவ்வொன்று கூடலுக்கு ஒழுங்குசெய்த தொழில் திணைக்களத்தினருக்கும் நன்றி தெரிவிக்கிறேன்

நாட்டின் அபிவிருத்தி தனியார் துறையிடமே இன்று அதிகம் தங்கியுள்ளது.

ஒருகாலத்திலே அரசஊழியர் மட்டுமே சலுகைகளை அனுபவித்தவர் தனியார் துறை ஊழியர்கள் கவனிக்கப்படவில்லை

தனியார் முதலாளிகள் ஊழியர்களுக்குச் சகல வசதிகளையும் செய்வதற்காக 1958இல்சேமலாபநிதி தொடங்கப்பட்டது

மத்திய வங்கியிலிருந்து ஆண்டாண்டு தனுப்பப்படும் அறிக்கையை ஊழியர்கள் சந்தேகக் கண்கொண்டே பார்க்கிறார்கள்.

இன்று கணக்குப் புத்தகங்கள் வழங்குவதால் அவர்களது பல சந்தேகங்கள் தீர்த்து வைக்கப்படுகின்றன என்றார்

கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கச் செயலாளர் திரு. எஸ். விஜயானந்தன் பேசுகையில்;

தொழிலாளர் இன்று அனுபவித்துவரும் சகல உரிமைகளும், சலுகைகளும், போராட்டங்கள், உயிர்த்தியாகங்கள் மூலமே கிடைத்தவை என்றார்.

இவ்விழாவில் 550ஊழியர்களுக்கு சேமலாப நிதிக் கணக்குப் புத்தகங்கள் வழங்கப்பட்டன

திரு. க. கனகராசா, திரு ஏ. சே நடராசா, திரு. வி சிவலிங்கம், திருரி தர்மராசா ஆகியோரும் உரை நிகழ்த்தினர். (இ-5)

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

புற்று நோய் அறிவு போட்டி

வட மராண புற்று நோய்ச் சங்கம் நடத்தும் புற்று நோய் அறிவுப் போட்டி அடுத்தமாதம் 12 ஆம் திகதி ஞாயிறு காலை 10 மணிக்கு யாழ்ப்பாண தாமோதர பயிற்சிப் பாடசாலை சோதனா மண்டபத்தில் நடைபெறும்.

விண்ணப்பித்த மாணவர்களின் கட்டிலக்கம், சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும்.

கட்டிலக்கம் பெறாத மாணவர்கள் 122, ராசாவின் தோட்ட ரோட்டில் உள்ள வடமராணவர் புற்றுநோய்ச் சங்கத்தில் உபதலைவரு டன் தொடர்புகொள்ளும்படி, சங்கத் தலைவர் டாக்டர் எம் ஜெகநாதன் கேட்டுள்ளார். (இ-எ)

சங்குவேலி இந்து மன்றம் கவிதைப் போட்டி

யாழ்ப்பாணம், செப் 29
நவராத்திரி விழாவை யொட்டி ஆவில் இளைஞர் கவிதைப் போட்டி ஒன்றைச் சங்குவேலி இந்து மன்றம் ஏற்பாடு செய்துள்ளது.

'வாணியை வேண்டுகிறேன்'. 'ஒரு வரம்தா' 'சக்தி பிறக்குது மூச்சினிலே' என்ற தலைப்புகளில் 24—32 வரிகளுக்குட்பட்ட மரபுக் கவிதைகள் போட்டிக்கு ஏற்றுக் கொள்ளப்படும். 4, 10. 86 முடிவு திகதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது

இக்கவிதைப் போட்டிக்குரிய ஏற்பாடுகளைத் தலைவர் திரு எஸ். பூதத்தம்பி, செயலாளர் திரு. ம. மகேந்திரதாசன் ஆகியோர் மேற்கொண்டு உள்ளார்கள். (இ 9)

வவுனியாவில் உழுந்து போன்று

கிளிநொச்சியில் பயறு அதிகளவு உற்பத்தியாக வேண்டும்

வயல் விழாவில் உரை

கிளிநொச்சி, செப் 29
வவுனியா மாவட்டம் எப்படி உழுந்து மாவட்டமாகியதோ அதேபோல் கிளிநொச்சி மாவட்டத்தை பயறு மாவட்டமாக மாற்ற வேண்டும்.

கிளிநொச்சி திரு சங்கரநாதனின் வயலில் நடைபெற்ற வயல் விழாவில் தலைமை வகித்துப் பேசிய கிளிநொச்சி உதவி விவசாய பணிப்பாளர் திரு. ச. த. பரமநாதன் மேற்கண்டவாறு கூறினார்

மேட்டு நில நிர்க்கரைகளின் கீழ் பயறு, தட்டைப் பயறு, பம்பாய் வெங்காயம், நிலக்கடலை, ஒரக்கன் என்பன பயிரிடப்பட்டு வரிசோதனைத் துண்டங்களும் அமைக்கப்பட்டன.

இப்பயிர்கள் அனைத்தும் மிகச் சிறப்பாக அமைந்தமையால் இதனைப் பார்த்து ஏனைய விவசாயிகளும் நன்மை பெறக் வேண்டும் என்பதால் இங்கு வயல் விழா கொண்டாடப் பட்டது.

வயல் விழாவின் போது கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு ஜெ. செந்தில் நாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

விழாவில் உதவி விவசாயப் பணிப்பாளர் தொடர்ந்து பேசுகையில்:-

கமக்காரர் மேட்டு நிலச் செய்கை என்றதும் மிளகாய்ப் பயிரையே யோசிக்கின்றனர்.

ஆனால் சங்கரநாதன் மேட்டு நிலத்தில் சிறு தானியங்களான பயறு, ஒரக்கன், பம்பாய் வெங்காயம் நிலக்கடலை ப்பான்றவற்றைப் பயிரிட்டு சிறந்த வருமானத்தைப் பெற்றுள்ளார்.

சகல விவசாயிகளும் இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். பயிர்ச்செய்கையில் மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டும்.

இப்படி அவர் கூறினார். (இ - 76)

விடுதலைசெய்ய கோரி கடிதம்

மண்டை தீவு, செப்.29
மண்டைதீவைச்சேர்ந்தவரும் சமூகசேவையாளருமான திரு. லோறன்ஸ் அலோசியஸ்ராண்டர் கடந்த நான்கு மாதங்களாக கொழும்பு இரகசிய பொலீஸ் பிரிவில் சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவரை உடன் விசாரணை செய்து விடுதலை செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு மண்டைதீவு பிரதேசவாழ் ஒழுங்கு செயலாளர் யாழ். அரசாங்க அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். (இ-88)

ஆவரங்கால் அச்சுவேலி வீதி திருத்தப்படும்

யாழ்ப்பாணம், செப். 29
ஆவரங்கால், அச்சுவேலி, தொண்டமானறு வீதி இந்த ஆண்டுக்குள் திருத்தப்படும்.

இந்த வீதியில் திருத்த வேலைகள் இந்த ஆண்டு வேலைத் திட்டங்களிலிருந்து விலக்கப்பட்டிருந்தது.

இவ்வீதியின் மோசநிலையை பொதுமக்கள் திட்டமிடல் கணிப்பாளரின் கவனத்துக்கு கொண்டுவந்ததைத் தொடர்ந்து அவர் வீதியை நேரில் சென்று பார்வையிட்டார்.

இதற்கென இரண்டு லக்சம் ரூபா ஒதுக்கி இதற்கான பூர்வ ங்க வேலைகளை ஆரம்பிக்க அவர் உத்தரவிட்டார். (இ-5)

பண்டத்தரிப்பில் மரம் நடும் விழா

பண்டத்தரிப்பு, செப்.29
பண்டத்தரிப்பு பத்தி மாதா ஆலய வளவில் மரம் நடும் விழா நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது.

பெரியவிளான் மகிழுந்தை ஜெயக்குமார் அடிகள் இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளார்.

பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட ஆண்டகை அதி.வண. நியோகுப்பிள்ளை ஆண்டகையும் யாழ்ப்பாணம் விவசாய விரிவாக்கப் பணிப்பாளர் திரு. ச. கிருஷ்ணபிள்ளையும் கலந்து கொள்வர். (இ-180)

ஆங்கில தின போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செப் 29
யாழ் மாவட்ட பாடசாலைகளுக் கிடையிலான ஆங்கில தினப்போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

இப்போட்டி மூன்று பாடசாலைப் பிரிவுகளில் நடைபெற்றது.

போட்டி முடிவுகள் தற்போது உதவியோக பூர்வமாக வெளியிடப் பட்டிருக்கின்றன

இம் முடிவுகள் தினமும் தொடர்ந்து உதயனில் வெளிவரும்

போட்டி முடிவுகள் ஏழாம் நாளாக இன்று பிரசுரமாகின்றன.

பிரிவு2, ஆண்டு 8

சொல்லெழுதல்;

1. கே லக்கேவி, மாதகல் மேற்கு, அ. த. க. பாடசாலை, 2 எம். தவலிங்கம், புலோலி, ம வி, 3. பி. கலைந்தினி வட்டு. திருஞானசம்பந்தர் வித்தியாலயம்.

எழுத்து:

1. கே. பவானி, கொழும்புத்துறை இந்து ம. வி. 2. வி சுபாஜினி கச்சுவேலி, சரவணா வி. 3. எஸ் ராஜசிறி, வட்டு திருஞானசம்பந்த வித்

குழுப்பாட்டு!

1. வீமன்காமம் ம. வி 2 உடுவில், முருகமூர்த்தி வித். 3 நாயன்மார் கட்டு மகேஸ்வரி வித்

பா. ஓதல்

1 ரி கவிதா, இளவாலை மெயின் டான் ம வி. 2. பி பிரேமதா, கோப்பாய் சரவணபவானந்த வித். 3. ரி. நஸ்ரினா, சென் மேரிஸ் மகளிர் ம வி.

உரத்து வாசித்தல்

1 ஏ சபேஸ்குமார், சின்மயபாரதி வித்தியாலயம், 2. எஸ் நவினி அரியாலை சிறி பார்வதி வித். 3. எஸ். கரேந்திரன் மாதகல் மேற்கு அ. த. க. பா.

பிரிவு 2 ஆண்டு 9

சொல்லெழுதல்

1. எஸ் ஞானந்தினி சுதுமலை சின்மயபாரதி வித் 2 பி. தேவிகா பண்ணாகம் மெய்ன் டான் ம. வி. 3. ரி. திருச்செல்வம் அரசினி இந்துக்கல்லூரி

எழுத்து

1. ஏ பொன் டொல்லோ சில்லாலை ஆர். சி. ரி. எம். எஸ், 2. எஸ். பவானி கரவாய் ம வி, 3 ரி. மாக் வடிசன் உடுவில் மாதர் ம. வி

பிரிவு-1 ஆண்டு-9

வடம்பார்த்தல் கட்டுரை

1 ஜி சுதாவாணி. அரசினி, சரஸ்வதி ம வி 2. எஸ் ரூபாவதி, வல்லிபுரம், திருஞானசம்பந்தர் வித், 3. ஆர். குகிகுமார் கம்பர்மலை ஜி. ரி. எம். எஸ்.

உரத்து வாசித்தல்

1. எச். கல்யாணி, நல்லூர் இந்து தமிழ் மகளிர் வித், 2 ரி. சுகர்ணா, கம்பர்மலை அ. த. க. பா, 3. ஜே அன்ரனி டக்ஸ்ரன், பசிந்தா ஆர். சி. ரி. எம் எஸ்

குழுப்பாட்டு

1 வீமன்காமம் ம. வி. 2 நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித், 3. சென் மேரிஸ் ம.வி.

பா. ஓதல்

1. எஸ். கிறஞ்சலி, வீமன்காமம், ம. வி, 2. ரி. வதிலா சென் அன்ரனீஸ் ஆர் சி ஜி எஸ், 3. எஸ். கிறாரிவிஸ் சென் அன்ரனீஸ் ஆர். சி ஜி. எஸ்

பிரிவு-2ஆண்டு-10

சொல்லெழுதல்

1. பி சுகாலினி சுதுமலை சின்மயபாரதி வித், 2 பி பரமகுமாரி வண்ணாரா வத்தை வித்தியோதயா வித், 3. எம். சுரேஷ் மாதகல் மேற்கு ஜி. ரி. எம் எஸ்.

எழுத்து

1 கே செல்வராஜா நவாலி மா. வி, 2. எம் அனறிமிராண்டா, சென் ஜேம்ஸ் மகளிர் ம வி. 3. எம். மோலா சுதுமலை சின்மய பாரதி வித்.

படம் பார்த்தல் கட்டுரை

1 எச். நிலாந்தி, அரசினி இந்துக் கல்லூரி, 2 கே. கே. பூங்கொடி அரசினி இந்துக் கல்லூரி. 3 எஸ். தவேஸ்வரி கோப்பாய் சரவணபவானந்தா வித்.

குழுப்பாட்டு-

1 (சென் யேம்ஸ் மகளிர் ம.வி). 2. (கோப்பாய் சரவணபவானந்தா வித்)

பா ஓதல்-

1. பி விஜயலட்சுமி (கொழும்புத்துறை துரையப்பா ம.வி), 2. எஸ் பபிதா சுபாசினி (பசிந்தா பாடசாலை) 3. சாந்தினி (சென் யேம்ஸ் மகளிர் ம வி)

உரத்து வாசித்தல்-

1. எஸ். யூட்லன் மாதகல்பாபு (கொழும்பு சம் செபாஸ்ரியன் வித்) 2. வி பாலகுமாரி (வாத்தரவத்தை வித்தி னேஸ்வரா வித்), 3. ரி. ஜீவனு (பசிந்தா ஆர். சி. ரி. எம்.எஸ், 3 பி. சுமாவினி (சின்மயபாரதி வித்தியாலயம்)

பிரிவு 2 ஆண்டு11

எழுத்து-

1. எஸ் திருஷ்ண வேணி (புத்தூர் ம-வி), 2 எம். சாந்திஸ்வரன் (இளவாலை மெய்ன் டான் ம வி), 3. எம். விக்கினேஸ்வரி இளவாலை மெய்ன்டான் ம.வி)

சொல்லெழுதல்-

1 இளாரிஸ்பிரந்தி (சென். அன்ரனிஸ் பாலஷையூர்), 2. பி. அன்ரனிற்றில பார்மலா (கொக்குவில் வித் ஆர். கே. எம் வித்), 3 வி. விஜயகுமார் (சுதுமலை சின்மயபாரதி வி.த).

குழுப்பாட்டு-

1 (சென்மேரிஸ் ம வி) பேச்சு-

1. பி அன்ரனிற்றில் பானா (கொக்குவில், கிழக்கு ஆர். கே.எம்). 2. ஏ. மாறி ஜராங்கனி (சென் அன்ரனிஸ் பாலஷையூர்) 3. கிளாரிஸ் பிரந்தி (சென் அன்ரனிஸ் பாலஷையூர்)

(வளரும்)

தேடுதல்கள் தொடருமாம்

கொழும்பு, செ. 29
திருமலை, தம்பலகமம், நிலாவெளிப் பகுதிகளில் ஆயுதப்படையினர் நடத்திவரும் தேடுதல்கள் தொடர்ந்து இடம்பெறும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன. (இ-ஐ-எ)

சிறுவிளம்பரம்

வேலணை கல்விப் பொருட்காட்சியில் மில்க்வைற்

8.10.86 வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி ம வி. வித்தியாலயத்தில் உள்ள மில்க்வைற் விளம்பரச்சாலையில் மில்க்வைற் தயாரிப்புகளை ரூ 15j- வாங்கும் அன்பர்களுக்கு அறிவு நூல்கள், கோரவிதைகள், பொலீத்தீன் பாக், அன்பளிப்பாக வழங்கப்படும். மேலுறைகள் சேகரித்துவைத்துக் கொண்ட அன்பர்கள் அங்கு கொடுத்து உயர்ந்த பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

—மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

பிரயாண ஒழுங்குகள்

- கனடா
- டென்மார்க்
- ஜேர்மனி
- சவூதி

கனடா, டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் சென்ற வார பயணங்களை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளார் இதுவரை எமது பல பயணங்கள் விரைவாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் டென்மார்க்கிற்கு அந்நாடு விதிக்கும் தடைகளையும் மீறி எமது முகவர் உங்களை நேரடியாக அழைத்துச் செல்வார்.

ஜேர்மனிக்குச் செல்ல விருப்பம் உள்ள ஆண்கள், பெண்கள் (குறிப்பாக அங்கு மணம் செய்யவிருப்பவர்கள், மணம் செய்தவர் ஒன்றுகூட) உங்களை எமது பிரயாண முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார்.

சவூதி அரேபியாவிற்கு விசா அனுப்புக்கு உடன் விரைவாக அனுப்பி வைக்கப்படுவார்கள். உடன் பாஸ்போர்ட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும். சென்ற மாதம் சவூதிக்கு எம்மிடம் வாஸ் போட் தந்தவர்கள் இந்த மாதம் 18ஆம் திகதி சவூதி சென்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பஸ் இல: 764
பலாலி வீதி,
கோண்டாவில்
கிழக்கு.

தொடர்பு:
N. பாலா
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில்
கிழக்கு,
கோண்டாவில்.

* உங்கள் நன்மை கருதி தீவும் பகுதியில் ஒமேகா ரவல்ஸ் ஸுர்ஸ் எனும் பெயரில் வங்காளவடிச் சந்தியில் அமைந்துள்ளது.
* ஒமேகா ரவல்ஸ் & ஸுர்ஸ் குரூப்பான் சந்திக்கு அருகாமையிலும் இன்று நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் நவீன சந்தையில் உண்ணாவிரதம்

சுன்னாகம், செப் 29
சுன்னாகத்தில் இன்று திங்கட்கிழமை உண்ணாவிரத இயக்கம் நடைபெறுகிறது.

வெயிலையும் பனியையும் உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவளித்தும் தமிழ் இளைஞர்களுக்கு நீதி வழங்க கோரியும் சுன்னாகம் பொதுமக்கள் இன்றுகாலை நவீன சந்தையில் பிரமாண்டமான உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்துகின்றனர்.

பல பொதுஸ்தாபனங்களும் சனசமூக நிலையங்களும், இளைஞர் அமைப்புக்களும், சுன்னாகம் பிரசைகள் குழு உட்பட பல குழுக்களும் ஒன்றிணைந்து இந்த உண்ணாவிரத இயக்கத்தை நடத்துகின்றன (இ-87)

வவுனியாவில் சிறுமி, இளைஞர் காயம்

வவுனியா, செப்; 29
வவுனியா வேலன் ஞானத்தில் நேற்றுக்காலை ஆயுதப்படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 13 வயதுச் சிறுமி சுகந்தியும் அபூபக்கர் என்ற இளைஞனும் காயமடைந்தனர்.

சிறுமி வேலன் ஞானத்தைச் சேர்ந்தவர் இளைஞன் தாழமுகைக் ஞானத்தைச் சேர்ந்தவர். (இ-எ)

கூடிய விலையில் எரிபொருள் விற்போர் மீது நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப். 29
கட்டுப்பாட்டு விலையை மீறி கூடிய விலையில் எரிபொருள் விற்போர் மீது கடும்நடவடிக்கை எடுக்கப்படும்.

வடமராணவ எரிபொருள் விற்பனையாளர் முகவர் சங்கத் தலைவர் திரு. எஸ் கதிர்காமநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்

சங்கம் வெகு சிரமத்தின் மத்தியில் கட்டுப்பாட்டுவிலையில் எரிபொருள் விற்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

ஒரு காருக்கு 10 லீற்றர் பெற்றோலும் மோட்டார் சைக்கிளுக்கு 5 லீற்றர் பெற்றோலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களின் மூலமாக விநியோகிக்கப்படுகின்றன.

இதை பலர் சாதகமாக பாவித்து பெற்றோலை வாங்கி பதுக்குகிறார்கள். சிலர் அவற்றை மீண்டும் அதிக விலைக்கு விற்கிறார்கள்.

இப்படி அதிக விலைக்கு விற்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் படும்.

வடமராணத்திலுள்ள 69 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் 30 நிலையங்களே இன்று ஓரளவு இயங்குகின்றன.

சில நிலையங்களும் இயங்க சங்கம் நடவடிக்கை எடுக்கும்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (இ - 5)

மாணவர்கள் ஒழுக்கம் கட்டுப்பாடு, அமைதி கடைப்பிடிக்க வேண்டும்

மானிப்பாய், செப் 29
கல்விக் கண் காட்சியை திறம்பட நடத்திக் கொண்டிருக்கும் மாணவர்கள் ஒழுக்கம், கட்டுப்பாடு, அமைதி ஆகியவற்றைக் கடைப் பிடிக்க வேண்டும்.

மானிப்பாய் வட்டாரக் கல்விக் கண்காட்சி ஆரம்பித்து வைத்துப் பேசிய வலிகாமக் கல்வி அதிகாரி திரு- எஸ். தனஞ்செயன் இவ்வாறு கூறினார்.

மானிப்பாய் வலிகாமத்தைச் சேர்ந்த ஐம்பது பாடசாலைகள் இணைந்து நடாத்திய இக்கல்விக்கண்காட்சி இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது. இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி, ஞா. சோமசுந்தரம் நாடாவை வெட்டித் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

கண்காட்சியில், ஆக்கிலம், சித்திரம், இசை, நடனம், வரலாறு, விஞ்ஞானம், கணிதம், மரவேலை, உலோகவேலை, வாழ்க்கைத் திறன், விவசாயம், சமூகக்கல்வி, தமிழ், சமயம், ஆரம்பக் கல்வி ஆகிய துறைகளில் கண்காட்சி செய்யப்பட்டுள்ளன. (இ.90)

கூடிய விலையில் எரிபொருள் விற்போர் மீது நடவடிக்கை

விமானச்சீட்டுக்கள், பாஸ்போர்ட் பொண்ட், விசா, ரெலக்ஸ்

CONFIRMATION RE-CONFIRMATION

தொலைபேசி சேவை:
23364, 28866

நிப்பொன் ரெலி ரவல்ஸ்
2 G ஸ்ரான்லி வீதி,
கஸ்தூரியார் - ஸ்ரான்லி வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்
நெறிமுறை தவறிய
அரசர்க்கு அறமே யமனாகும்
—சிலப்பதிகாரம்

உதயன்
உண்மை – விரிந்தாமை – தரு நிலைமை

இல. 15 2வது ஒழுங்கை தொலைபேசி 24805
பின்சார நிலையம் வீதி, 22073
யாழ்ப்பாணம், 29-9-1986 த. பெ. இல. 23

இப்போதாவது ஒருக்கால் தட்டிப் பாருங்களேன்!

தாக இறந்த பின்னர், தமது உடலை எரிக்கும்போதும் அந்த உடம்பிலிருந்து தமிழ் மணக்கவேண்டும் என்று விரும்பியவன் பாவேந்தன் பாரதிதாசன் அந்தளவுக்கு அவன் தமிழ்ப் பக்தன். தமிழின் தாசன். தமிழ்ப்பித்தன். தமிழ் நேசன். அவனது தமிழ்ப் பற்று அவனை அவ்வாறு பாடவைத்தது!

அவனைவிட, எங்கள் தமிழ் இளைஞர்கள் ஒருபடி உயர்ந்து விட்டார்கள்!! அவர்கள் ஈழத் தமிழ் மண்ணின் மீது கொண்ட பற்று எல்லோருக்கும் எழுச்சி தரவல்லதாக உள்ளது.

தமது உடல் எரிந்து பிடி சாம்பராகும் போதுகூட அது தமிழ் மண்ணில் சேரவேண்டும் என்பது அவர்களது ஆசை. தங்கள் உடம்பு வெந்து விஞ்சும் சாம்பர் தமிழ் மண்ணுடன் இரண்டறக் கலக்க வேண்டும் என்பது அவர்கள் ஆசை. தமிழ் சாம்பர் சுதந்திரத் தமிழ் மண்ணின் எதிர்கால வளத்துக்கு உரமூட்ட வேண்டும் என்பது அவர்களின் விழைவு. மொத்தத்தில் அவர்கள் தமிழ் மண்ணின்மீது கொண்டமோகம் அவர்களது அப்பளுக்கற்ற தேசப்பற்றுக்கு ஒரு விழுமிய உதாரணம்.

பூஸா தடுப்பு முகாமில் வைத்து வதைக்கப்படும் தமது சக தோழர்களுக்காக சக இளைஞர்களுக்காக அனுதாபம் தெரிவித்துச் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கிறார்கள் வெலிக்கடைச் சிறைக் கைதிகள். அவர்கள் இலங்கை நாட்டின் ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் விடுத்த முக்கிய கோரிக்கை ஒவ்வொரு தமிழன் மனதிலும் உறைக்க வேண்டும்.

சிறைக் கூண்டுக்குள் பிணியப்போகும் தங்கள் உயிருக்குயிய உடலினை, தமது சொந்த மண்ணுக்கு அனுப்பப்பட வேண்டும் என்பதே அவர்கள் ஜனாதிபதிக்கு விடுத்திருக்கும் கோரிக்கை.

அதனை வெறும் கோரிக்கையாகக் கொள்ளக் கூடாது. நீதி விசாரணை இன்றி, எழுத இயலாத, சொல்லொணாத உடல், உளச் சித்திரவதைகளுக்கு ஆளாகும் தமிழ் இளைஞர்களின் தேசப்பற்றின்—சொந்தத்தாய்மண்ணின் மீதுள்ள பாசத்தின் சின்னமாகக் கணித்துக் கொள்ளவேண்டும்.

நீதியைக் கேட்டு, அடிப்படை மனித உரிமைகளைக் கோரி, மனிதனின் அடிப்படைத் தேவைகளை வேண்டி அவர்கள் சாத்வீகப் போராட்டம் நடத்துகிறார்கள். அத்தச் சாத்வீகப் போராட்டம் வெற்றிதராது என்பது அவர்களுக்குத் தெரிந்துவிட்டது.

சிறைச்சாலைச் சித்திரவதைகளை அனுபவித்த போதிலும் துணிச்சலுடன் போராட்டத்தில் குதித்தவர்கள் அல்லவா அவர்கள்? தாம் இறக்கும்போதாவது தீர்வைக் அவர்களுக்குப் புரிந்துவிட்டது. அதனால்தான் தமது உயிர்கள் சொந்த மண்ணில் பிரிய முடியாது போனாலுங்கூட உடலினையாவது அங்கு எடுத்து தமிழ் நிலத்துக்கு உரமூட்ட வேண்டும் என்று எண்ணிவிட்டார்கள்.

அவர்களது துணிவை, தியாகத்தை விட தமிழ் மக்கள் மீது கொண்ட பற்றுத்தான் மேலோங்கி நிற்கிறது

அவர்களது தமிழ் மண் பற்றையும் பாசத்தையும் கண்டு அவர்களைப் பாராட்டுவதோடு நின்று விடக்கூடாது. அதே தமிழ் மண் பற்றும், மொழிப்பற்றும், கலாசாரப் பற்றும் ஒவ்வொரு தமிழனுக்கும் வரவேண்டும். அந்தப் பற்றுகள் இல்லாதவன் தமிழனாக இருக்க முடியாது.

1983 ஆம் ஆண்டில் சிங்களக் குண்டர்களின் அரக்கத் தனத்துக்கு தமிழர்கள் பலர் இரையானபோது, அந்த அடாவடித்தனங்களை அனுபவித்த தமிழர்கள் தாம் சாவதானால் சொந்த மண்ணில் தான் சாக வேண்டும் என்று நினைத்தார்கள். வாயால் வெளிப்படையாகவும் சொன்னார்கள். ஆனால் அது நில நிற்கவில்லை.

தொழில் வேண்டி, பணம் வேண்டி மீண்டும் தெற்கே போய் விட்டார்கள் பலர். இதே போன்று தான் தமிழ்ப் பற்று, மண்பற்று முன்னமும் பலதடவைகள் (1958 இல் 1977இல் என்று) தமிழர்களுக்கு வந்து போயின!

அங்கே தான்— அதனால் தான் நாம் கெட்டு நிற்கிறோம். மொழி, மண், கலாசாரப் பற்றுகள் எம்மிடம் நிலைத்து நிற்க வேண்டும். அது நீண்டு நீக்கமற நிலைக்குமாயின் எத்தனை துன்பமும் பெரும் பொருட்டல்ல.

எமது மண், எமது மொழி, எமது மக்கள் என்ற எண்ணம் ஒவ்வொரு தமிழன் மனதிலும், செயலிலும் ஊன்றுமாயின் உரிமைகளை அடைவது நிச்சயம்.

தாம் இறந்தால் உடலினை தமிழ் மண்ணில் எரிக்க வேண்டும் என்று தமிழ் இளைஞர்கள் ஆசைப்படும் சந்தர்ப்பத்திலாவது, உங்கள் மொழிப்பற்று, மண் பற்று, கலாசாரப் பற்று ஆகியவற்றை ஒருக்கால் தட்டிப்பார்த்து இயங்குங்களேன்...!

உணர்ச்சி பிறக்கும்; எழுச்சி எகிறும்!!

அன்னையர் முன்னணி விடுக்கும் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.29

வெலிக்கடை, பூஸா முகாம்களில் நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்கள் தொடர்பாக பின்வரும் விடயங்களையிட்டு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை அரசை அன்னையர் முன்னணி வலியுறுத்தி உள்ளது.

1. பூஸா முகாமிலும்

(4ஆம் பக்கம் வாரிக்க)

அமைதிப்பேச்சு ஒருபுறம்
கிளர்ச்சி மறுபுறம்

பிலிப்பீன்ஸில் நிச்சயமற்ற நிலைமை

மணிலா, செப் 28

பிலிப்பீன்ஸ் நிலைமை பற்றி இராணுவ அதிகாரிகளோடும் அமைச்சர்களோடும் ஜனாதிபதி அக்கினோ பேச்சுவார்த்தை நடத்தி வரும் வேளையில் இன்னுமொரு இடத்தில் கம்யூனிஸ்ட் கெரில்லாக்களின் தாக்குதல்களினால் 16 பேர் பலியானார்கள்.

பிலிப்பீன்ஸின் தென் பகுதியிலுள்ள பதாயா வில் இராணுவ வாகனங்கள் மீது கெரில்லாக்கள் மறைந்து தாக்கியதில் 9 இராணுவ வீரர்களும் 5 பிரசைகளும் கொல்லப்பட்டனர்.

4 இராணுவ வீரர்கள் படுகாயமடைந்தனர்

இந்த இடத்திற்கு அண்மையில் உள்ள மற்றுமொரு நகரில் கெரில்லாத் தாக்குதலினால் மேலும் இரு இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர்.

கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக முழு அளவில் யுத்தம் தொடுப்பதற்கு முன்னர் சகல சமாதான வழிகளும் கையாளப்படவேண்டும் என அக்கினோ கூண்டத்தில் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைகள் மேலும் நடத்தப்படுவதற்கு முதல் கிளர்ச்சியாளர்கள் யுத்த நிறுத்தம் ஒன்றிற்கு இணங்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

தேசிய ஜனநாயக முன்னணியைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கிளர்ச்சியாளர்கள் கடைசியான 30 நாள் யுத்த நிறுத்தத்தை இம்மாத ஆரம்பத்தில் நிராகரித்திருந்தனர்.

பிலிப்பீன்ஸின் கிளர்ச்சியாளர்களின் வன்முறைச் சம்பவங்களில் இவ்வருடம் மட்டும் 2 ஆயிரம் மக்கள் உயிரிழந்தனர். என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (ஒ)

ஜெயில்சிங் வேண்டுகோள்

புதுடில்லி, செப் 28

அணுஆயுத உற்பத்தி நிலை நிறுத்தமாறு ஜனாதிபதி ஜானி ஜெயில்சிங் வல்லரசு நாடுகளைக் கோரியுள்ளார்

எந்தப் போரிலும் இந்த நவீன ஆயுதங்களை உபயோகிப்பது மனித குல அழிவிற்கே வழி வகுக்கும் என்று தெரிவித்த ஜனாதிபதி இந்தியா பாதுகாப்பு நடவடிக்கைகளில் நிகர் வலிமை செலுத்துவதாகவும் குறிப்பிட்டார்.

சில வெளி சக்திகளின் நிய நோக்கங்கள் குறித்து இந்தியா எச்சரிக்கையாக இருக்கின்றது எனவும் அவர் தெரிவித்தார். (ஒ)

செய்திச்சரம்

நாஸா சம்மதம்

ஜகார்த்தா, செப். 28

அமெரிக்கா தேசிய விண்வெளி ஆராய்ச்சி நிலையம் (நாஸா) இந்தோனேஷியாவின் செய்மதியொன்றை விண்வெளிக்குக் கொண்டு சென்று பூமியின் சுற்றுப் பாதையில் விடுவதற்குச் சம்மதித்துள்ளது.

அதிபர் சுகர்தோ மார்ச் மாதம் 19ஆம் திகதி இத்திட்டம் செயற்படுத்தப்படும்.

இதற்கான செலவு 5 கோடி30லட்சம் டாலர்களாகும். (ஒ)

பிரிட்டனின் திட்டம்

லண்டன், செப். 28

ஐரோப்பிய நாடுகளில் எழுந்துள்ள வேலையில்லாத் திண்டாட்டங்களைப் போக்குவதற்காக பிரிட்டன் புதிய திட்டமொன்றை உருவாக்கியுள்ளது

ஐரோப்பிய பொருளாதார சமூக மாநாட்டில் வேலை வாய்ப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் வேலையற்றோரின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு சிறிய வர்த்தக முயற்சிகளை ஊக்குவிக்க வேண்டும் என்ற கருத்தை பிரிட்டன் வலியுறுத்தியது. (ஒ)

அக்கினோ ஜப்பான் செல்வார்

மணிலா, செப். 28

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி திருமதி கொரசோன் அக்கினோ நவம்பர் மாதம் ஜப்பான் செல்வார்

பிலிப்பீன்ஸின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டி எழுப்புவதற்கு ஜப்பானிடம் உதவி கோருவதே இந்த விஜயத்தின் முக்கிய நோக்கமாகும்.

அமெரிக்காவிற்கு அடுத்தபடியாக பிலிப்பீன்ஸுடன் அதிக அளவு வர்த்தக தொடர்புகளை ஜப்பான் கொண்டுள்ளது (ஒ)

பாக். விமானநிலையம்: 'பன்னும்' பாவியாது

இஸ்லாமாபாத், செப். 28

காராச்சியில் நடைபெற்ற அமெரிக்க விமானக் கடத்தல் சம்பவத்தை முறிருக விசாரணை செய்து முடிக்கும் வரையிலும் விமானநிலையத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் வரையிலும் காராச்சி விமானநிலையம் ஊடாக 'பன்னும்' சேவை நடைபெறாது

பாதுகாப்பு ஏற்பாட்டில் சமனக் குறைவு காரணமாகவே இந்த விமானம் கைப்பற்றப்பட்டது எனவும் தெரிவிக்கப்பட்டது.

பாகிஸ்தான் அரசு இதுவரை விசாரணைகள் நடத்தியும் கடத்தல் காரர்கள் எந்த நாட்டவர்கள் என்பது பற்றிய அறிவிப்பு எதுவும் வெளிவிடாதது கண்டிக்கத்தக்கது.

இவ்வாறு அமெரிக்க விமான நிறுவனம் வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கின்றது. (ஒ)

நிதி அமைச்சர் மாநாடு முடிவு

சென்னாசியா, செப். 28

காமன்வெல்த் நாடுகளின் நிதி அமைச்சர்கள் நேற்று சென்னாசியாவில் இரண்டு நாள் மாநாட்டை முடித்தனர்.

வலிமையடைந்த நாடுகள் வறிய நாடுகளுக்கு கூடுதலான உதவி வழங்க வேண்டும் என கேட்டு கோள் விடுக்கப்பட்டது. (ஒ)

வெளி உலகில்

வங்காளத்தில் பெரு வெள்ளம்

கல்கத்தா, செப். 28

இந்தியாவின் வங்காள மாநிலத்தில் கடும் மழை காரணமாக பெரும் உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் ஏற்பட்டுள்ளன

இதனால் சுமார் 130 பேர் உயிரிழந்திருக்கலாம் எனவும் 4 லட்சம் மக்கள் வீடுகளை இழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது

வங்காள மாநிலத்தில் விமான, ரயில், விதிப் போக்கு வரத்துக்களும் சீர்குலைந்துள்ளன.

நிவாரண வேலைகளும் மீட்பு வேலைகளும் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

2 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வெள்ளப் பகுதிகளில் இருந்து மீட்கப்பட்டு நிவாரண முகாம்களில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஒ)

83' ஜூலை குழப்பத்தின்போது இலங்கைக்கு இராணுவத்தை அனுப்ப அமெரிக்கா முயன்றது

இந்திரா முறியடித்தார் என்கிறார் கலவானை எம்.பி.

கொழும்பு, செப்.29

1983 ஜூலை கலவரத்தின்போது அமெரிக்கா தனது இராணுவத்தை இலங்கைக்கு அனுப்ப முயற்சித்தது அதிர்ஷ்டவசமாக அந்த முயற்சியை இந்தியாவின் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி முறியடித்தார்.

இப்படி கலவான எம்.பி திரு டியூ. குணசேகரா அக்குரஸ்ஸ தொகுதியில் கடுவ பஸாரில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

இலங்கை மக்கள் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி ஆகியன இக்கூட்டத்தை நடத்தின.

திரு. குணசேகர மேலும் சொன்னதாவது;

மக்களில் ஒரு பகுதியினரை புறக்கணித்து வந்ததினாலேயே இந்த நிலைமை ஏற்பட்டது.

துட்டகைமுனு காலத்திலும் நாமிடை 50 அரசர்கள் ஆண்டு வந்தனர். அப்போதும் அதிகாரப் பரவலாக்கல் இருந்தது.

தனிப்பட்ட லாபங்களுக்காக சரித்திரத்தை திரித்துக் கூறக்கூடாது

இன்று தினமும் 2 கோடி ரூபாவை அரசு பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகச் செலவு செய்கின்றது. ஏழை நாடு இதைத் தாங்குமா? மொழிவாரியாக இந்த நாட்டை இரண்டாகப் பிரிக்கத் தான் வேண்டும்.

ஐம்பது மொழிகள் பேசும் சீனாவில் 100 கோடிக்கு மேற்பட்ட மக்கள் ஒரே நாடாக ஒற்றுமையாக வாழவில்லையா?

58இனங்கள் எதியோப்பியாவில் ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறார்களே?

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிட்டால் பாகிஸ்தான் போன்ற சர்வாதிகார நாடாக இலங்கைமாறும் சாத்தியக்கூறுதான்தென்படுகிறது

இப்படி திரு. டியூ. குணசேகரா சொன்னார். திரு பெர்னாட் சொய்சா (லசக), திரு. பீட்டர் கெனமன் (கம்யூனிஸ்ட்) ஆகியோரும் பேசினர். (இ-எ)

உல்லாசப் பயண மாநாட்டு வெளியீட்டில் இலங்கையின் பெயர் இல்லை

சிங்கப்பூர், செப். 27

சிங்கப்பூரில் நடைபெற்ற அமெரிக்க உல்லாசப் பயண ஏஜென்ஸிகள் சங்கத்தின் 56 ஆவது மாநாட்டில் வைத்து கொண்ட பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்ட வெளியீட்டில் இலங்கை இடம்பெறவில்லை.

இந்தியா, இந்தோனேஷியா, மாலைதீவு, ஆஸ்திரேலியா, பிலிப்பீன்ஸ், ஹொங்கொங், ஜப்பான் ஆகிய நாடுகள் பற்றி எல்லாம் விவரிக்கப்பட்டிருந்தன.

ஆனால் நிலைமையைப்பற்றி ஒரு வார்த்தைகூட அந்த வெளியீட்டில் காணப்படவில்லை.

இதனால் மாநாட்டில் கலந்து கொண்ட இலங்கைப் பிரதிநிதிகள் 'அனாதைகள்' போன்ற நிலையில் இருந்தனர் என்று செய்திகள் வந்துள்ளன.

இனப்பிரச்சினை மோதல்களைத் தொடர்ந்து உல்லாசப் பயணிகளுக்கு இலங்கை பாதுகாப்பான இடம் அல்ல என்ற கருத்து உலக அரங்கில் ஏற்பட்டுள்ளதே, காங்கிரஸ் வெளியீட்டில் இலங்கை இடம் பெறாமற் போனமைக்குக் காரணம் என்று உல்லாசப் பயண ஏஜன்ஸிப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

'இலங்கையில் முதலில் நிரந்தர அமைதி பிறக்கட்டும்; அதன் பின்னர் அங்கு உல்லாசப் பயணிகளை அனுப்பி வைப்பது பற்றி யோசிப்போம்' இப்படி மாநாட்டில் கலந்து கொண்ட இலங்கைப் பிரதிநிதிகளுக்குத் தெரிவிக்கப்பட்டதாம். (இ-எ)

சுடச்சுட செய்திகளில்

முத்துமாரி அம்மன் மஹோற்சவம்

வேலணை, செப். 29

வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் 83 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

நாளை 30 ஆம் திகதி திருக்குளிப்பும் அக்டோபர் முதலாம் திகதி வேட்டைத் திருவிழாவும், சப்றத்திருவிழாவும் இரண்டாம் திகதி தேர்த்திருவிழாவும், மூன்றாம் திகதி தீர்த்தத் திருவிழாவும், நான்காம் திகதி பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும்.

மஹோற்சவத் திருவிழாக்களை சிவஸ்ரீ சாம்ப சிவக் குருக்கள் தலைமையிலான நிபுணர் பிரேமன் மணி சி. கப்பிரமணிய சாஸ்திரி, சிவஸ்ரீ சாம்ப சிவக் குருக்கள் நடாத்தி வருகின்றார்கள். (இ-167)

துர்க்கையம்மன் நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், செப். 29

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலய நவராத்திரி விழா 4 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை நடைபெறும்.

நவராத்திரி விழாக் கிரியைகள் ஆலய பிரதம குரு சிவாகம ஞான சாகரம் சிவஸ்ரீ சேகர சுந்தரக் குருக்களால் நடாத்தப்படும்.

அக்டோபர் 12 ஆம் திகதி முதல் நவம்பர் 11 ஆம் திகதி வரை தேரோர வெளி விரத பூஜை நடைபெறும்.

வெளி விரத அனுஷ்டானங்களுக்கு இலவசமாக வெளிவிரதப் புத்தகம் வழங்கப்படும் என [illegible] ஸ்ரீ ப. மகாலிங்கசிவம் [illegible]

வாசகர் திருமுகம்

அதிபர் கடமைபுரியும் ஆசிரியர்களின் பரிதாப நிலைமை

20-04-1980இல் அதிபர் தரங்கள் நிர்ணயிக்கப்பட்டு தரமுள்ளவர்களுக்கும் தரம் குறைந்தவர்களுக்கும் நிரந்தர அதிபர் பதவி வழங்கப்பட்டது.

இந்திகதி நிர்ணயம் எந்த அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது என்பது இன்றுவரை தெரியாதுள்ளது

இந்திகதியில் பதில் அதிபர் கடமை புரிந்தவர் சிலருக்கு இன்னமும் நிரந்தர நியமனம் கிடைக்கவில்லை.

நான் 5 வருடங்கள் தொடர்ந்து பாடசாலைப் பொறுப்பாசிரியராகக் கடமை ஆற்றினேன். மொத்தம் பன்னிரண்டு வருடங்கள் பதிற் கடமைபுரியும் அதிபராக தாய்க்கொத்தவிச்சபை ஆரம்பமான உறுப்பினராக, அதன் செயலாளராகக் கடமையாற்றி வருகின்றேன்

இப்பொழுது கடமையாற்றும் பாடசாலையை 1981இல் 42 மாணவர் வரவுடன் 6ஆம் ஆண்டு வகுப்புடன் ஒரு ஆசிரியர் பாடசாலையைப் பாரம் எடுத்தேன்.

இன்று இப்பொழுது 1000க்கு மேற்பட்ட பிள்ளைகள், 19 ஆசிரியர்கள் உள்ளனர். ஆசிரியர் பற்றுக்குறை, தளபாடப் பற்றுக் குறைகளுடன் பாடசாலை நடைபெற்று வருகின்றது.

இன்று எறிகும் மாணவர்களில் 95 சத வீதமானோர் இடம்பெயர்ந்து வந்த அகதிகள், அனேகர் மலையக மாணவர்கள்.

11ஆம் ஆண்டு அரசாங்கப் பரீட்சைகளுக்கு தோற்றும் பாடசாலையைப் பாரிய கஷ்டத்தின் மத்தியில் பாடசாலை தற்போது வளர்ச்சியடைந்துள்ளது.

கல்வி அமைச்சு, அமைச்சின் உரிய செயலாளர், கல்விச்சேவை ஆணைக்குழு ஆகியவற்றிற்கு உரிய முறையில் தகுந்த சிபார்சுகளுடன் பிரச்சினைகள்பற்றி எழுதியும் பதில் இல்லை.

ஆசிரியர் சங்கங்களை அணுகி உரிமை கோரினால் பல காரணங்களைக் கூறித் தட்டிக்கழிப்பு, பரிசுகளைப் பரீட்சைகளில் தரம்பார்த்துத் தட்டிக் கழிப்பு

இந்நிலையில் எல்போன்ற பதில் கடமையாற்றும் அதிபர்கள் விரக்தியின் விளிம்பில் தொடர்ந்தும் கடமை புரிவது நியாயமா?

பொன். தில்லைநாயகம்
கிளிநொச்சி.

39 பேருக்கு ஜனாதிபதி விருது வழங்குவார்

கொழும்பு, செப். 29

அடுத்தமாதம் 6 ஆம் திகதி 39 ஆயுதப்படையினருக்கு ஜனாதிபதி விருதுகளை வழங்கவிருக்கிறார்.

இவர்களில் ஆறுபேர் போராளிகளின் தாக்குதல்களில் உயிரிழந்தவர்கள்.

விருது பெறவுள்ளவர்கள் படைவீரர்களாக வருமாறு

இராணுவம் - 20
கடற்படை - 18
விமானப்படை - 7

(இ-ஜ-எ)

பொய்யாவிளக்கு

குறள்:

கடக் கடகும் பொன்போல் ஒளிவிடும் துன்பஞ்
சுடச்சுட நோக்கிற் பவர்க்கு

பொருள்:

புடமிட்டுச் சுடச்சுட ஒளிவிடுகின்ற பொன்னைப்போல், தமக் செய்கின்றவரைத் துன்பம் வருந்த வருந்த மெய்யுணர்வு மிகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெலிகுளோப்
ரெலிபோன் சேவையில்
வல்லவர்கள் நல்லவர்கள்
ரெலிகுளோப்!
ஆர். ஜி கட்டடம், ஸ்ரான்லி வீதி
யாழ்நகர்.

உதயன்

29 - 09 - 1986 திங்கட்கிழமை

யாழ்நகரில்
பத்து ரெலிபோன்களைச்
சேவையில் ஈடுபடுத்தி முழுமையாக
ரெலிபோன் சேவையிலேயே
கண்ணும் கருத்தும் உள்ள
ஒரே ஒரு நிறுவனம்
ரெலிகுளோப்
ரெலிபோன்: 25088
பத்து சமாந்தர லைன்கள்

தனியார் மருத்துவக் கல்லூரி:

தெற்கிற்கு அனுமதி வடக்கிற்கு இல்லையா?

விளக்கக் கூட்டத்தில் கேள்வி

யாழ்ப்பாணம், செப் 29

தனியார் மருத்துவக் கல்லூரியை அங்கீகரிக்கும் விடயத்தில் தெற்கிற்கு அனுமதி. வடக்கிற்கு மட்டும் ஏன் [வழங்க முடியாது?

இவ்வாறு கேள்வி எழுப்பினார் அரச சிகிச்சை நிபுணர் டாக்டர் எக்ஸ். சேவியர்.

வடஇலங்கை மருத்துவக் கல்லூரி மாணவர்-பெற்றோரின் பொதுக் கூட்டம் யாழ்ப்பாணத்தில் உள்ள கல்லூரி ஆலோசனைமண்டபத்தில் நடைபெற்றபோது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:-

கொழும்பில் தனியார் மருத்துவக் கல்லூரியை அங்கீகரித்த அரசாங்கம் எப்படி நமது மருத்துவ கல்லூரிக்கு அங்கீகாரம் மறுக்க முடியும்.

இரண்டு விடயங்களில் இரு வேறு அளவுகோல்கள் இருக்க முடியுமா? எனவே நமது கல்லூரிக்கு அங்கீகாரம் கிடைக்கும் வாய்ப்புண்டு.

எமது கல்லூரி மாணவர்கள் பயிற்சியின் பின்னர், படிப்பின் பின்னர் யாழ் வைத்தியசாலை மருத்துவ பீடத்தில் பரீட்சைக்குத் தோற்றுவார்கள். அப்பரீட்சையில் அவர்களுக்குக் கிடைக்கும் பெறுபேறுகளின் அடிப்படையில் மட்டுமே பட்டங்கள் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இதுவே நமது கறுதியான நிலைப்பாடு ஆகும்.

எமது மாணவர்கள் அடுத்த வருடம் முதலாண்டுப் பரீட்சைக்குத் தோற்றுவார்கள் என்பது நமது அசையாத நம்பிக்கை ஆகும்

இவ்வாறு டாக்டர் சேவியர் விளக்கிக் கூறினார்.

கூட்டத்திற்கு தலைமை வகித்த டாக்டர் ஆர் பிலிப் தமது உரையில் கூறியதாவது:-

வட இலங்கை மருத்துவக் கல்லூரி அரசின் அங்கீகாரத்தைப் பெறும் சாத்தியம் கூறுகள் ஏற்பட்டுள்ளன. அவ்வாறு அங்கீகாரம் பெறுவதற்குப் பூரணஅருகதை அக் கல்லூரிக்கு உண்டு

இவ்வாண்டு முடிவடைய முன்னர் இக் கல்லூரிக்கு உத்தியோக பூர்வ அங்கீகாரம் கிடைக்கும் என்று வடஇலங்கை மருத்துவக் கல்லூரி அஞ்சு சபை மாணவர்கள், பெற்றோர்கள் கருதியுரை கூறுகிறது.

தமிழ் மாணவர்! சமூகத்தின் நலன் கருதி உயர்கல்வியை வளர்க்கும் நோக்குடன் இக்கல்லூரி அமைக்கும் முயற்சிகள் தொடரப்பட்டன.

இதனை அமைப்பது தொடர்பான பொருளாதார, சட்ட, கல்விப் பிரச்சினைகள் நன்கு விரிவாக ஆராயப்பட்டன அதன் பின்னரே இம்முயற்சியில் முழுமையாகத் திட்டமிடு ஈடுபட்டோம்.

உத்தியோகபூர்வ அங்கீகாரம் கிடைக்க முன்னர் இக்கல்லூரி ஏன் செயற்பட்டதென விளக்கம் அளிப்பது எமது கடமை.

பல்கலைக்கழகம் சம்பந்தமான சட்டத்தின்கீழ் இயங்கிக் கொண்டுள்ள கல்லூரி மட்டுமே அங்கீகாரம் கோரலாம். எனவேதான் இது முன் கூட்டியேஆரம்பமானது.

நாடாளுமன்றத்தில் அங்கீகாரம் கோரும் தனிநபர் பிரேரணைமுதல் வாசிப்பில் நிறைவேறியுள்ளது.

அங்கீகாரம் கோரும் விண்ணப்பப் பத்திரங்களை பல்கலைக்கழக மானியக் கமிஷன் நம்மிடம் தந்துள்ளது

அவற்றை நிரப்பி நாம் அனுப்பிய பின்னர் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பரீட்சகர்களுக்கு அவை அனுப்பிவைக்கப்படும்.

நன்றியாய்ந்த அனுபவம்மிக்க விரிவுரையாளர்கள், போதிய தளபாட வசதிகள், ஆய்வுகூட வசதிகள் வைத்தியசிகிச்சை வசதிகள் இருப்பின் எமக்குரிய சிபார்சு கிடைப்பதில் கஷ்டமிருக்க முடியாது.

இவ்வாறு டாக்டர் பிலிப் விளக்கம் அளித்தார்.

டாக்டர் எஸ். வாமதேவனும் உரையாற்றினார். (இ-9)

இலங்கைக்கு ஆயுதக் கடத்தல் செய்தியில் உண்மை இல்லை

கான்பெரா. செப். 28

ஆஸ்திரேலிய ஆயுதக் குதம் ஒன்றில் இருந்து ஆயுதங்கள் இலங்கையில் உள்ள தீவிரவாதிகளுக்குக் கடத்தப்பட்டன என்று கறப்பட்ட குறிச்சாட்டுக்களில் உண்மையில்லை

இப்படி ஆஸ்திரேலிய பாதுகாப்பு அமைச்சர் பீட்லி தெரிவித்தார்.

இத்தகவல் பொழுதில் உள்ள ஆஸ்திரேலிய தூதரகம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவில் இருந்து இலங்கைக்கு ஆயுதங்களைக் கடத்த உதவினார் என்று கறப்படும் ராம் டேமியன் ஒரு தமிழரல்லர்; அவர் ஆஸ்திரேலிய பழங்குடி வகுப்பைச் சேர்ந்த ஒருவர்

அவர் தமிழராக இருப்பின், ஆஸ்திரேலிய பழங்குடியினரின் காந்திய இயக்கமான 'டிட் ஸெடோ' வை இணைக்கும் வல்லமை பெற்ற முதல் தமிழராக அவர் இருந்திருப்பார்

ஆயுதக் கடத்தல் ஒற்றச்சாட்டை ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி எம்பி திரு சிக்கினவர் விடுத்திருந்தார். அக் குற்றச்சாட்டு ஆதாரமற்றது - இப்படி பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார் என்று தூதரக அறிக்கை தெரிவித்தது. (இ-எ)

நஞ்சு கலப்பு பயமுறுத்தல்:

மலைநாட்டில் 6 தனியார் தேயிலை தொழிற்சாலைகள் மூடப்பட்டன

கொழும்பு, செப் 29

நஞ்சு கலக்கப்படும் என்ற பயமுறுத்தலை தொடர்ந்து ஏற்பட்ட தேயிலை விலையில் வீழ்ச்சி காரணமாக மலைநாட்டில் ஆறு தனியார் தேயிலை தொழிற்சாலைகள் மூடப்பட்டன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 15 தொழிற்சாலைகள் மூடப்படும் ஆபத்தில் உள்ளன.

உலக சந்தையில் இலங்கை தேயிலை விலை வீழ்ச்சி கண்டு வருகிறது.

கொழும்பு ஏல விற்பனையில் கடந்த 4 மாதங்களாக விலை வீழ்ச்சி காணப்பட்டு வருகிறது

கொழும்பு ஏலத்தில் விலை வீழ்ச்சி அடைந்து வருவதற்குரிய காரணங்களில் தேயிலையில் நஞ்சு கலக்கப்படும் என்று தீவிரவாதிகள் விடுத்த பயமுறுத்தலும் ஒன்று-இப்படி பிரபல ஏலவிற்பனைத் தரகு நிறுவனமான ஜோன் கீல்ஸ் தலைவர் டேவிட் பிளாக்லர் தெரிவித்தார்.

நஞ்சு கலக்கப்படும் என்ற பயமுறுத்தல் காரணமாக மேற்கொள்ளப்படும் வாகுபாடு நடவடிக்கைகளினால் செலவினங்கள் அதிகரித்துள்ளன.

இதனால் கூடிய விலை கொடுத்து தேயிலையை வாங்குவதில் இத்தாலியும் ஆஸ்திரேலியாவும் பின்வாங்கியுள்ளன எனறும் திரு. டேவிட் பிளாக்லர் சொன்னார். (இ-எ)

இப்பத்திரிகை வாழ்ப்பாணம், விக்டோரியா வீதி, இரண்டாவது குறுக்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், கிறாபிக்ஸ்ஆர்ட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்ட வெளியீடு திகதி 29 - 09 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15 Second Lane, Power House Road, Jaffna.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number QJ 69 No86

பிறந்த தின வாழ்த்து

மானிப்பாய் ஆனந்தா வீதியைச் சேர்ந்த திருச்செல்வம் இராசலட்சுமி தம்பதிகளின் செல்வப் புதல்வன் நிரோஜன் இரண்டாவது பிறந்த தினத்தைத் தமது இல்லத்தில் இன்று சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

அப்பா, அம்மா, அக்கா மார் உறவினர்கள் சிறப்புடன் நீடூழி வாழ வாழ்த்துகின்றார்கள்.

வடமராட்சியில் இன்று உண்ணாவிரதம்

உடுப்பிட்டி, செப் 29

வெளிக்கடை, பூனாவிக் சாகும்வரை உண்ணாவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக பிரசைகள் குழுக்களின் ஒன்றியம் ஒரு அராலியிலும் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், செப்,29

சிறைகளில் உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக நாளை செவ்வாய்க்கிழமை அராலியில் ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படும்.

அராலி தெற்கு சன சமூக நிலையம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது

அராலி தெற்கு சன சமூக நிலைய மண்டபத்தில் நாளை காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை உண்ணாவிரதம் நடைபெறும். (உ)

நாளை உண்ணாவிரதப் போராட்டத்தை இன்று மேற்கொள்கிறது

இன்று காலை 9 மணிக்கு உண்ணாவிரதம் ஆரம்பமாகும்.

பருத்தித்துறை பிரசைகள்குழு, பருத்தித்துறை கிழக்குப் பிரசைகள்குழு, நெல்லியடி பிரசைகள் குழு, வல்வெட்டித்துறை பிரசைகள்குழு போன்ற பிரசைகள்குழுக்கள் தத்தமது இடங்களிலேயே இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ளும்

கந்தர்மடத்தில் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம் செப் 29

யாழ்ப்பாணம் கந்தர்மடம், எழுமீதி ஞானஜோதி சனசமூக நிலைய முன்றலிலும் இன்று ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் நடைபெறும்

இன்று காலை 9 மணிக்கு உண்ணாவிரதம் ஆரம்பமாகும் (உ)

விஜய குமாரணதுங்க நல்லூரில் பூஜையும் கூட்டமும் நடத்துவாராம்

கொழும்பு, செப் 29

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில் பூஜையும் யாழ்ப்பாணம் நகரில் பொதுக்கூட்டமும் நடத்த இலங்கை மக்கள் கட்சி ஒழுங்கு செய்து வருகிறது.

அடுத்த மாதம் 15 ஆம் திகதி இவை நடைபெறும் என்று கட்சிப் பொதுச் செயலாளர் திரு. விஜயகுமாரணதுங்க தெரிவித்ததாக கொழும்பில் இருந்து வெளிவரும் 'த ஐலண்ட்' ஆங்கில நாளிதழ் ஞாயிறு பதிப்பு செய்தி வெளியிட்டுள்ளது

"யாழ்ப்பாணத்தில் நாம் பூஜையும் கூட்டமும் நடத்துவதற்கு வடபகுதியில் உள்ள தமிழர் அமைப்புக்கள் உதவுவதாக வாக்களித்துள்ளன.

நாங்கு போராளி அமைப்புக்கள் செல்வியல் வைத்து எமக்கு இந்த உறுதியை அளித்தன

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் நாம் யாழ்ப்பாணத்தில் பூஜையும் கூட்டமும் நடத்துவதில் தங்களுக்கு ஏதும் பிரச்சினைகள் இல்லை என்று கூறியிருக்கிறார்" - இப்படி திரு விஜயகுமாரணதுங்க சொன்னார் என்று 'ஐலண்ட்' செய்தி கறியது (இ-எ)

சிறுப்பர் கைது

கொழும்பு, செப். 29

ஒரு நீதிவான், ஒரு வேலர், 3 டாக்டர்கள், 2 அமைச்சுச் செயலாளர்கள் ஆகியோரை ஏமாற்றி சுமார் இரண்டே முக்கால் லட்சம் ரூபாவை மோசடி செய்ததாகக் கூறப்படும் அரச திணைக்கள 'சிறுப்பர்' ஒருவரைக் கொழும்புப் புலனாய்வுப் பொலீஸார் கடந்த சனிக்கிழமை கைது செய்தனர்.

மூன்றாண்டுகள் நடந்த விசாரணையின் முடிவில் இந்தச் சிறுப்பர் கைதானார்.

இரண்டாந்தர மோட்டார் வாகனங்களை விற்பனை செய்ததாகக் கறிய இச்சிறுப்பர் மணத்தை மோசடி செய்தாராம். (இ.எ)

அன்னையர்----

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வெலிக்கடைச் சிறையிலும் எத்தகைய விசாரணையுமின்றி நடுத்து வைத்திருப்போரை உடனடியாக விடுதலை செய்க.

2. சிறைச்சாலையில் உண்ணாவிரதமிருப்போரின் நீதியான அனைத்து கோரிக்கைகளையும் உடனடியாக நிறைவேற்றுக.

3. அவர்கள் மீதான சகல சித்திரவதைகளையும் நிறுத்துக.

4. சிறைகளில் சாகும்வரை உண்ணாவிரதமிருப்போர் பற்றிய தகவல்களை வெளியிடுக.

5. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கும் சான பெண்களை பற்றிய விபரங்களையும் வெளியிடுக. (இ)

ஜேர்மன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்திக் இருந்து குண்டுகள் வீசப்பட்டன. எம்காரின் மேலும் குண்டு விழுந்தது. காரை விட்டு இறங்கி நானும் மற்றவரும் காட்டுக்குள் ஓடினோம். இப்படி நாம் ஓடிக்கொண்டிருந்த சமயத்திலும் காரர் 25 குண்டுகள் விமானத்துள் இருந்து வீசப்பட்டன

குண்டுச் சத்தங்கள் ஒப்பந்த பின்னர் பிறந்த வரை ஏனையோர் தூக்கிக் கொண்டு வந்தனர். உழவு இயந்திரம் ஒன்றில் அவரைக் கொண்டு சென்றோம் அவர் இடைவழியில் இறந்து விட்டார் — என்று சொன்னார்.

விபத்து மரணம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

ஷெல் விழுந்த இடத்தில் அயாஸ், சம்சுதீன், முபாரக் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர்

மரண விசாரணையில் தகவல்

முல்லைத்தீவு, செப் 29

சம்பவதினம் எமது பகுதியில் இரண்டு ஹெலிகொப்டர்கள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. திடீர் என்று பாரிய சத்தத்துடன் குண்டு வெடிப்பு ஒன்று கேட்டது. அப்துல் அயாஸ், சம்சுதீன், முபாரக் ஆகியோர் மூவரும் இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக் கண்டேன்

அப்துல் அயாஸின் சகோதரர் அப்துல் சலீம் (வயது 31) முல்லைவனம் நீராவிப்பிட்டி மரணவிசாரணை தொடர்பாகச் சாட்சியம் அளிக்கையில் மேற்கண்டவாறு கறினார்.

கடந்த 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முல்லைவனம், நீராவிப்பிட்டிப் பகுதியில் நடந்த தாக்குதலின்போது அப்துல் அயாஸ் (வயது 42) மீராமைதீன் சம்சுதீன் (வயது 68) செல்லையா சிவராசா (வயது 27) ஆகியோர் கொல்லப்பட்டனர்.

இம்மரணங்கள் தொடர்பான மரண விசாரணை நடைபெற்றபோது அப்துல் அயாஸின் சகோதரர் அப்துல் சலீம் பின்வருமாறு கூறினார்.

கடந்த 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை ஆறரை மணி அளவில் எமது பகுதியில் இரண்டு ஹெலிகொப்டர்கள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

சிறிது நேரம் செல்ல கடைக்குமுன்பாகவந்த குண்டு வெடிப்புச் சத்தம் கேட்டது.

நான் ஓடிப்போய்ப் பார்த்த பொழுது அப்துல் அயாஸ், மீராமைதீன் சம்சுதீன், சம்சுதீன் முபாரக் ஆகியோர் இரத்த வெள்ளத்தில் கிடந்தனர்.

சம்பவம் நடந்த இடத்திற்கு ஹெலிகொப்டர்கள் சிறிது நேரம் கவனிக்கக் உலோகத்துண்டுகள் காரையிருப்பதையும் அருகே இருந்த வீட்டிலுள்ள மரவள்ளி கரைக்கண் முறிந்திருந்ததையும் கண்டேன்

சனங்கள் பீதியினால் அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தனர்.

இறந்த நபரை செல்வ சம்சுதீனும், அயாஸும் இறந்து விட்டனர்.

இப்படி அவர் கறினார்.

பிரேத பரிசோதனை செய்த முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சே. சண்முகநாதன் சாட்சியம் அளிக்கையில்: இவர்கள் மூவருக்கும் குண்டு வெடிச் சம்பவத்தால் ஏற்பட்ட காயங்களால் மரணம் ஏற்பட்டது என்று கறினார்.

விசாரணைப்பதிவேடுகளை முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிக்கு அனுப்பிவைத்து புலன் விசாரணையைத் தொடர்ந்து நடத்தும்படி பொலீஸாரைப் பணித்த மரண விசாரணை அதிகாரி கே. நிராகரசா தீர்ப்பை வழங்குவதைப் பிறிதொரு தினத்துக்கு ஒத்தி வைத்தார். (இ-93)

சிறைக்கு வெளியே

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படியும் கோரியுள்ளனர்.

யார் இந்த வதைமுகாம் உண்ணாவிரதிகள்?

எமது மக்களின் அடிமைத் தளையிலிருந்து விடுவிக்க புறப்பட்ட புதுயுக மைந்தர்கள் தான் இவர்கள் இவர்கள் கேட்பதெல்லாம் தமது அடிப்படைத் தேவைகளான சாப்பாடு, தண்ணீர், மருத்துவ வசதியே.

இதற்காக வதைகளுக்குள், கொலைகளுக்கும் சர்வதேச ரீதியில் புகழ் வாய்ந்த வெலிக்கடையிலும், பூனாவிலும் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தினை நடத்தி வருகின்றனர்.

இவர்கள் இந்த மண்ணையும், எமது மக்களையும் நேசித்தவர்கள் சிறைக்குள் தள்ளப்பட்டனர் வதைக்கப்படுகின்றனர் எமது தாய் மார்கள், சகோதரிகள் மோசமான பலவிதமான வதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு, துன்புறுத்தப்படுகின்றனர்.

இவ் வதைமுகாம் போராட்டத்தைமேலும் பலப்படுத்தி சர்வதேசமயப்படுத்தும் நோக்குடன் மாணவர்களாகிய நாமும், தமிழ்பேசும் மக்களும் இணைந்து செறிவுறு வரும் போராடுவோம்

இதனைப் பலமடையிலிருந்து செவ்வாய்க்கிழமை நடைபெறவிருக்கும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் மாணவர்களாகிய நாமும் அணைந்து தமிழ்பேசும் மக்களும் மாபெரும் கிளர்ச்சியுடன் இணைந்து போராடுவோம்

மேலும் ஊர்வலம் கரும்பராய் சந்தியிலிருந்தும், பெருவளவு கோவிலடியிலிருந்தும் ஆரம்பமாகும் இவ்வூர்வலத்தில் கலந்து கொள்வோர் தங்களை அணிமிதுவான மேற்குறிப்பிட்ட ஆரம்ப இடங்களில் இணைந்து கொள்வதும்.

பெருமான் கோவிலில் ஆரம்பமாகும் ஊர்வலம் பருத்தித்துறை வீதி வழியாகச் சென்று கரும்பராயிலிருந்து பலாலி வீதி வழியாக வரும் ஊர்வலத்துடன் திடீரென வெலிச்சந்தியில் இணைந்து கொள்ளும்

—இ. பக. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

சிப்பாய்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முதல் செய்யப்பட்டன.

கடந்த சில வாரங்களுக்கு முன்னரும் பிரதேசங்களை கொண்டு செல்ல ஆயத்தப்பட்டபோதும் பொராளிகளினால் அவை பறிமுதல் செய்யப்பட்டன.

இது தொடர்பாக சிப்பாய்கள் புளொட் போராளிகளுக்கு கடிதம் எழுதியிருந்தனர் என்பது தெரிந்ததே (உ-10)

பாடசாலை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்களையும் மீட்டது.

மேற்படி பாடசாலையில் இருந்து எடுத்துச் செல்லப்பட்ட ஜன்னல், கதவு, நிலைகள், தீராந்திகள், பலமரங்கள், கூரைத் தகடுகள் ஆகியவற்றை இக்குழு மீட்டது (இ-119)

குடும்பத் தகராறு கத்தி வெட்டில் முடிவு ஆவரங்காலில்சம்பவம்

அச்சுவேலி, செப், 29

பலத்த வெட்டுக் காயங்களுடன் ஒருவர் யாழ் பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை மாலை ஆவரங்கால் சர்வோதய வீதியில் உள்ள கள்ளுத்தவறணைக்குமுன்னாலமையில் நடைபெற்றது.

இருகுடும்பங்களுக்கிடையிலான தகராறு கத்தி வட்டில் முடிவடைந்ததாகக் கறப்படுகிறது.

இதனை கேள்விப்பட்ட இளைஞர் குழுமம் ஒன்று சந்தேகநபரை சிகிச்சைக்காக அழைத்துச் சென்றது. (இ - 11)

நூற்றிப்பத்து பொலீஸாருக்கு விசேஷ பதவி

கொழும்பு, செப். 29

வடக்கு,கிழக்குப் பகுதிகளில் நிறைமையாகச் சேவை புரிந்தவர்கள் என்று தெரிவு செய்யப்பட்ட 110 பொலீஸாருக்கு விசேஷ பதவி உயர்வுகளை பொலீஸ்மா அதிபர் வழங்கியிருக்கிறார்.

4 சப் இன்ஸ்பெக்டர்கள் இன்ஸ்பெக்டர்களாகப் பதவி உயர்த்தப்பட்டனர். 10 சார்ஜண்டுகள் சப் இன்ஸ்பெக்டர்களாகவும் 96 கான்ஸ்டபிள்கள் சார்ஜண்டுகளாகவும் பதவி உயர்வு பெற்றனர் (இ-எ)

கிணற்றில் பெண்ணின் சடலம்

வட்டுக்கோட்டை செப். 29

சன நடமாட்டம் இல்லாத இடத்திலுள்ள கிணறு ஒன்றில் நிர்வாணமாக காணப்பட்ட பெண் ஒருவரின் சடலம் இளைஞர்களின் உதவியுடன் கிராமமக்களினால் மீட்டெடுக்கப்பட்டது

மாதகல் ஆம்பிளிய வத்தை கிராமத்தி லுள்ள கிணறு ஒன்றிலிருந்தே சடலம் மீட்கப்பட்டது.

23 வயது மதிக்கத்தக்க இப் பெண்ணின் சடலம் நெரிக்கப்பட்டதோடு முகத்திலும் அடிக்கப்பட்ட காயங்கள் இருந்தன.

சடலத்தை உரிமை கோருவதற்கு எவரும் முன்வராததை அடுத்து இளைஞர் கோஷ்டியினரும் ஊர்மக்களும் சேர்ந்து இச்சடலத்தை தகனம் செய்தனர்.

இப்பெண்ணின் உறவினர்கள் எவராவது இருந்தால் இவரால் உரப்புல சமூகர் சமாதான சபை ஒன்றியத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது (இ 161)

உலக சுற்றுடன் தின கருத்தரங்கு

வேலணை செப் 29

வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையினால் நடத்தப்படும் உலக சுற்றுடன் தின கருத்தரங்கு வேலணை பல நோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் எதிர்வரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. தா. சந்திரசேகரம் தலைமையில் நடைபெறும் (இ- 67)

உணவுமுத்திரை தொடர்பான வேண்டுகோள்

காங்கேசன்துறை, செப் 29

மயிலிட்டி, பலாலி பகுதி மீளவந்தவர்களுக்கான உணவு முத்திரைகள் உதவி அரசாங்க அதிபர் மணிலையில் அல்லாமல் நேரடியாக கிராமசேவையாளர் மூலமாக வழங்கப்படவேண்டும்.

இப்படியான வேண்டுகோளை மயிலிட்டிக்கரை பிரஜைகள் குழுத் தலைவர் திரு. வி இராத்தினராசா உலவிடக்கு உதவி அரசாங்க அதிபரிடம் விடுத்தார் (இ-68)

சிப்பாய்களே கதவுகளைத் திறந்தனர்

முல்லைவனம், செப்.29

முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்குச் சமீபமாவுள்ள உணுப்புவவு என்ற இடத்தில் பூட்டப்பட்டிருந்த வீடுகளின் கதவுகளை முல்லைத்தீவு இராணுவ முகாமைச் சேர்ந்த சிப்பாய்கள் பலாத்காரமாக திறந்தனர்.

இந்த வீடுகளில் வசித்தோர் அங்கமையில் பாதுகாப்பான இடங்களை நோக்கிச் சென்றிருந்தனர். (இ-39

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org